**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 115/2013</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **24.10.2025** |
| **பெயர்** | **சம்பத்** |
| **த/பெ** | **மாணிக்கம்** |
| **சாட்சி** | **DW2** |
| **வயது** | **57** |
| **ஊர்** | **பொன்னேரி** |
| **தொழில்** | **துணை வட்டாச்சியர்** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.18.p.m**

**<u>முதல் விசாரணை–</u>**

1. 2–ம் பிரதிவாதி மற்றும் 3–ம் பிரதிவாதிகள் தங்களின் பட்டாவை ரத்து செய்ய கோரி கோட்டாச்சியரிடம் மனு கொடுத்தார்கள். அந்த மனுவில் சர்வே எண் 304/2எ, 320/1, 320/2, 321/1, 321/2 மற்றும் 321/3 ன் மொத்த விஸ்தீர்னம் 11 ஏக்கர் 49 செண்ட் என குறிப்பிட்டுள்ளது. அந்த 11 ஏக்கர் 49 செண்ட்–ல் சந்திரம்மாள் மற்றும் ராக்கம்மாளுக்கு 2–ம் பிரதிவாதி மற்றும் 3–ம் பிரதிவாதியின் குடும்பத்தார் 5 ஏக்கர் 17 செண்ட்டை விற்பனை செய்துவிட்டனர்.

2. சந்திரம்மாள் மற்றும் ராக்கம்மாள் அவர்களுக்கு ஒதுக்கிய 5 ஏக்கர்ஸ் 17 செண்ட் நிலம் அல்லாமல் பிரதிவாதிகளின் நிலத்தையும் சேர்த்து பட்டா மாற்றம் செய்ததால் ேஹமச்சந்திரரெட்டி மற்றும் வேனுகோபால்ரெட்டி அவர்கள் மீதும் அசல் வழக்கு எண் 103/2006 என்ற வழக்கில் சீனிவாசன் நகர் குடியிருப்போர் நல சங்கம் வழக்கு தொடுத்திருந்தது என்றும் மற்றும் சீனிவாசன் நகர் குடியிருப்போர் நல சங்கமானது ேஹமச்சந்திரரெட்டி மற்றும் வேனுகோபால்ரெட்டி அவர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண் 256/2005 தாக்கல் செய்தது. மேற்கூறிய வழக்குகள் நீதிமன்றத்தில்

நிலுவையில் இருந்தபோது அசல் வழக்கு எண் 256/2005 ல் இடைக்கால மனு எண் 1369/2009 தாக்கல் செய்யப்பட்டு அதில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் தாலுக்கா சர்வேயருடன் இருந்து நிலத்தினை அளந்தார்.

3. மேற்கூறிய இடைக்கால மனுவை சசீனிவாசன் நகர் குடியிருப்போர் நல சங்கத்தின் தலைவரான ரச்சகதாஸ் என்பவர் தான் தாக்கல் செய்தார். அந்த வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் 11 ஏக்கர் 49 செண்ட் நிலத்தில் சந்திரம்மாள் மற்றும் ராக்கம்மாளுக்கு 5 ஏக்கர் 17 செண்ட் ஒதுக்கிவிட்டு பிரதிவாதிகளுக்கு 6 ஏக்கர் 32 செண்ட் ஒதுக்கப்பட்டது. மேற்கூறிய பாகத்தின் படி பிரித்து கொள்ள வேண்டும் என்று மக்கள் நீதிமன்றத்தின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மாணத்தின் மூலம் மேற்கூறிய அசல் வழக்குகளும் முடித்து வைக்கப்பட்டு அந்த தீர்மாணமானது அசல் வழக்கு எண் 103/2006 ல் பதிவு செய்யப்பட்டது.

4. மேற்கூறிய மக்கள் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்மாணத்தின் அடிப்படையில் தான் ந.க 3228/2012/அ1 நிறைவேற்றப்பட்டது. மேற்கூறிய உத்தரவின் படி பட்டா எண் 614 மற்றும் 615 ராக்காமளின் பெயரை நீக்கம் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டு இருந்தது. அந்த உத்தரவானது தாசில்தார் பொன்னேரி(வட்டாச்சியர்) அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. நிலத்தினை அளவீடு செய்த பிறகு தான் பிரதிவாதிகளுக்கு சர்வே எண்கள் 321/1எ1, 320/1எ1எ வில் வேனுகோபால் ரெட்டி மற்றும் ஹேமச்சந்திரரெட்டி அவர்களின் பெயரில் பட்டா வழங்க கோரி உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கில் அனுமதிக்கப்பட்ட இடைக்கால மனு எண் 7/2025 மனு எண்ணின் மூலம் சாட்சி அழைப்பாணை வந்ததன் பெயரில் தான் நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் பிறபிக்கப்பட்ட ந.க 3228/2012/அ1 உத்தரவானது Ex. X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை–**

1. எங்களின் உத்தரவில் 20.07.2012 அன்று வேனுகோபால்ரெட்டி மற்றும் ஹேமச்சந்திரரெட்டி கொடுத்த மனு என குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த மனுவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, அரசாங்க பதிவேட்டில் உள்ளது. மேற்கூறிய 20.07.2012 தேதியிட்ட மனுவில் என்ன சர்வே எண்கள் குறிப்பிட்டு இருந்தது என்றால் சர்வே எண்கள் 321/1எ1, 320/1எ1எ மேற்கூறிய மனுவுடன் ஏதேனும் பட்டாவை இணைத்து கொடுத்தனரா என்றால் கொடுத்தார்கள் பட்டா எண் 614 மற்றும் 615 வைத்து இணைத்து கொடுத்தார்கள்.

2. 614 மற்றும் 615 பட்டாவில் யார் பெயர் இடம் பெற்றிருந்தது என்றால் ராக்கம்மாள் மற்றும் சந்திரம்மாள் பெயர் இடம் பெற்று இருந்தது. மற்ற யார் பெயரும் அதில் இடம் பெறவில்லை என்றால் சரிதான். Ex.X1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பட்டா எண்கள் 578 மற்றும் 527 ஆகியவைகளை வேனுகோபால்ரெட்டி மற்றும் ஹேமச்சந்திரரெட்டி அளித்த மனுவுடன் இணைத்து கொடுத்தார்களா என்றால் அவர்கள் அளித்த மனுவுடன் பட்டா பாஸ்புக் எண் 514 வைத்து இணைத்து கொடுத்துள்ளனா்.

3. Ex.X1 ஆவணத்தின் படி வேனுகோபால்ரெட்டி மற்றும் ஹேமச்சந்திரரெட்டி, சந்திரம்மாள் மற்றும் ராக்கம்மாள் ஆகியோர்களை அழைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் அழைப்பாணையின் விவரம் மற்றும் தேதி குறிப்பிடவில்லை என்றால் 02.04.2012 சீனிவாசனின் மனைவியான ராக்கமாளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவர்கள் இருவருக்கும் மட்டும் தான் அழைப்பாணை அனுப்பப்பட்டதா அல்லது மற்ற பிறருக்கும் அனுப்பப்பட்டதா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் கூற இயலும்.

4. சாட்சி தற்போது 14.03.2012–ல் வேனுகோபால்ரெட்டிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாக அவரிடம் இருக்கும் கோப்புகளை வைத்து கூறுகிறார். நான் அனுப்பியதாக கூறும் அழைப்பாணை பற்றி Ex.X1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் அந்த இரு அழைப்பாணைகளும் வட்டாச்சியர் அலுவலத்திலிருந்து அனுப்பப்பட்டவையாகும். அவ்வாறு அழைப்பாணை எதுவும் அனுப்பப்படவில்லை என்றும் Ex.X1 ஆவணத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி தற்போது மேற்கூறியவாறு அழைப்பாணை எதுவும் சார்வு செய்யப்படவில்லை என்றும் நேரடியாக அழைத்து தான் விசாரணை செய்யப்பட்டது என்று கூறுகிறார்.

5. விசாரணை எதுவும் செய்யாமல் Ex.X1 உத்தரவை தவறாக பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. Ex. X1 ஆவணத்தில் வேனுகோபால் ரெட்டி மற்றும் ஹேமச்சந்திரரெட்டி அவர்கள் ராக்கம்மாள் மற்றும் சந்திரம்மாளுக்கு செய்த கிரைய புல எண், உட்பிரிவு மற்றும் 4 எல்லைகள் சரியாக குறிப்பிடவில்லை என உள்ளது என்றால் Ex. X1 ல் குறிப்பிட்டுள்ள விசாரணையானது 2012–ல் நடைபெற்றது என்றும் அதன் முழு விவரங்கள் தற்போது நினைவில் இல்லை என்றும் விசாரணையின் பிறகு தான் 19.07.2012 தேதியிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

6. சரியாக குறிப்பிடவில்லை என கூறும் பட்சத்தில் அந்த நிலத்தை நான் நேரில் சென்று அளந்தேனா என்றால் நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் அளக்கப்பட்ட பின்பு தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 27.02.2012 தேதிக்கு பிறகு அரசாங்கத்தால் அளக்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு இருக்கையில் அளவீடு செய்யாமல் தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் 18.06.2006 ல் நில அளவையர் மற்றும் வழக்கறிஞர் ஆணையர் சேர்ந்து அளந்த பிறகு தான் பட்டா வழங்கப்பட்டது.

7. 18.06.2006 எந்த வழக்கின் மூலம் அளக்கப்பட்டது என்றால் அசல் வழக்கு எண் 256/2005. அந்த வழக்கானது நாராயணன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நாராயணன் என்பவரின் பவர் ஏஜென்டான ரச்சகதாஸ் வேனுகோபால்ரெட்டிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 01.25.p.m.**